


தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் 23 சட்டமன்றத் தொகுதிகளில் கட்டப்படவுள்ள 23 முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்களின் கட்டுமானப் பணிகளுக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரங்கிமலை பகுதியில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கத்தின் பணிகளை மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சினேகா, சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கர்நாடகாவிலிருந்து தமிழ்நாட்டுக்குள் நுழையும் கழிவு நீரால் ஏற்படும்

# பாதிப்புகளைத் தடுக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

## நாடாளுமன்றத்தில் – தயாநிதி மாறன் கேள்வி!

சென்னை, டிச. 9-

கர்நாடகாவிலிருந்து தமிழ்நாட்டுக்குள் சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் தென்பெண்ணை ஆற்றில் வெளியேற்றப்படுவது குறித்து ஒன்றிய அரசுக்கு தெரியுமா? தமிழ்நாட்டுக்குள் தினசரி நுழையும் கழிவுநீரின் அளவு என்ன? இந்த கழிவு நீரால் தமிழ்நாட்டுக்கு உட்பட்ட கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகியவற்றில் ஏற்படும் பாதிப்பு அதன் நச்சு தன்மை பொது சுகாதார ஆபத்துகள் உள்ளிட்ட விவரங்கள் என்ன? என்று நாடாளுமன்றத்தில் ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சருக்கு மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் திமுக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவருமான தயாநிதிமாறன்



கேள்வி எழுப்பினார். மேலும் தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்க மாசுபாடு ஏற்படுவதைத் தடுக்க தேசிய ஆறு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகள் அமலாக்க நடவடிக்கைகள் என்ன? என்பன போன்ற பல கேள்விகளையும் எழுப்பினார்.

அதன் விவரங்கள் வருமாறு :

கர்நாடகாவிலிருந்து சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் வெளியேற்றப்படுவது குறித்து ஒன்றிய அரசுக்கு தினசரி கலக்கப்படும் கழிவுநீரின் மதிப்பிடப்பட்ட தென்பெண்ணை ஆற்றில் தெரியுமா? ஆற்றில் அளவு என்ன?

தமிழ்நாட்டுக்குள் தினசரி நுழையும் கழிவுநீரின் அலுவல் ரீதியிலான மதிப்பீடு மற்றும் கீழ்நோக்கிய மாவட்டங்களான கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகியவற்றில் ஏற்படும் தாக்கம் நச்சு நுரை உருவாக்கம் நீர் மாசுபாடு பொது சுகாதார ஆபத்துகள் உள்ளிட்ட விவரங்கள் என்ன?

தென்பெண்ணை ஆற்றில் கழிவுநீர் வெளியேற்றத்தைத் தடுப்பது தொடர்பான தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (NGT) உத்தரவுகளை கர்நாடகா அரசும் ஒன்றிய அரசும் பின்பற்றிய நிலை சமர்ப்பிக்கப்பட்ட; நடவடிக்கை எடுக்கப்பட்ட அறிக்கைகளின் தேதிகள் உள்ளிட்ட விவரங்கள் என்ன?

மாநில நுழைவுப் பகுதிகளிலும் கீழ்நோக்கிய நீர்த் தேக்கங்களிலும் நீரின் தரப் பரிசோதனை அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளதா அல்லது மறு ஆய்வு செய்யப்பட்டுள்ளதா? மறு ஆய்வு செய்யப்பட்டிருந்தால் அதன் விவரங்கள் தற்போதைய நிலை என்ன?

தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்க மேலும் மாசுபாடு ஏற்படுவதைத் தடுக்க தேசிய ஆறு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளும் அமலாக்க நடவடிக்கைகளும் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினர்.

### தமிழ்நாட்டில் மாநகராட்சி, நகராட்சி அமைப்புகளுக்கு

# கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவ நிதி உதவி வழங்கப்படுகிறதா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, டிச.9-

தமிழ்நாட்டில், குறிப்பாக வேலூர் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், அடல் புத்துயிர் மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான இயக்கம் (AMRUT) திட்டத்தின் கீழ், கழிவுநீர் சுத்தி கரிப்பு நிலையங்களை நிறுவவும், பூஜ்ஜிய திரவக்கழிவு வெளியேற்ற (ZLD) அமைப்புகள் மற்றும் பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை உருவாக்குவதற்கும் ஒன்றிய அரசு நிதி வழங்கியுள்ளதா? என்று மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில், குறிப்பாக வேலூர் மக்களவைத் தொகுதியில், அடல் மிஷன் ஃபார் ரிஜுவனேஷன் அண்ட் அர்பன் டிரான்ஸ்ஃபார்ம் (AMRUT) திட்டத்தின் கீழ், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அரசு கட்டியுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் யாவை?

AMRUT திட்டத்தின் கீழ் கழிவுநீர் சுத்தி கரிப்பு நிலையங்களை நிறுவுவதற்கு, தமிழ்நாட்டில் உள்ள மாநகர மற்றும் நகராட்சி அமைப்புகளுக்கு அரசு



ஏதேனும் நிதி உதவி வழங்கியுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் தருக?

தமிழ்நாட்டில், குறிப்பாக வேலூர் மக்களவைத் தொகுதியில், பூஜ்ஜிய திரவக்கழிவு வெளியேற்ற (ZLD) அமைப்புகள் மற்றும் பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை உருவாக்குவதற்கு தொழில் துறை அலகுகளுக்கு நிதி உதவி வழங்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர் டோக்கன் சாஹு எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

சுகாதாரம் தூய்மைப்பணி உட்கட்டமைப்பு அமைத்தல் மற்றும் நிர்வகித்தல் என்பது மாநில அதிகார வரம்புக்கு உட்பட்டது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (STPகள்) என்பது மாநில அரசுகள் மற்றும் சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (ULB கள்)/நகர்ப்புற மேம்பாட்டு அதிகாரிகளின் பொறுப்பாகும். இந்திய அரசு திட்ட வட்டமான தலையீடுகள்/ஆலோசனைகளின் மூலம் மாநிலங்களின் முயற்சிகளை ஆதரிக்கிறது. இது அடல் புத்துயிர் மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான இயக்கம் (AMRUT) மற்றும் AMRUT 2.0 போன்ற பல்வேறு திட்டங்கள்/திட்டங்கள் மூலம் மாநிலங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குகிறது.

AMRUT இன் கீழ், மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் திட்டங்களைத் தேர்ந்தெடுக்க, மதிப்பிட, முன்னுரிமை அளிக்க, செயல்படுத்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளன.

AMRUT போர்ட்டலில் மாநில அரசு தெரிவித்தபடி, AMRUT இன் கீழ் 5,670.8 கோடி மதிப்புள்ள 18 கழிவு நீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மை திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன. இதில் ஒரு நாளைக்கு 500 மில்லியன் லிட்டர் (MLD) திறன் கொண்ட 9 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அதிகரிப்பதும் அடங்கும். AMRUT இன் கீழ் மாநிலம் பூஜ்ஜிய திரவக் கழிவு வெளியேற்ற (ZLD) அமைப்புகள்/பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (CETPகள்) ஆகியவற்றை எடுக்கவில்லை.

வேலூர் மக்களவைத் தொகுதியில், 69.21 MLD திறன் கொண்ட 2 STPSகள் உட்பட 885.91 கோடி மதிப்புள்ள 03 கழிவுநீர்/கழிவுநீர் மேலாண்மை திட்டங்களை அரசு மேற்கொண்டுள்ளது.

AMRUT இன் கீழ், தமிழ்நாட்டில் பூஜ்ஜிய திரவக்கழிவு வெளியேற்ற (ZLD) அமைப்புகள்/பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை (CETPகள்) இயக்குவதற்கு தொழில்துறை அலகுகளுக்கு எந்த நிதியும் வெளியிடப்படவில்லை.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் தெரி வித்துள்ளார்.

### தொகுதிப் பார்வையாளர் பி.டி. பாண்டிச்செல்வம் பங்கேற்பு!

# மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே. ராஜன் அறிவிப்பு!

சென்னை, டிச.9-

மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழக கூட்டம் இன்று (09.12.2025) மாலை 5.00 மணி அளவில் பகுதி கழக அலுவலகத்தில் (நொளம்பூரில்) பகுதி கழக அவைத்தலைவர் ஆர். கர்ணல் தலைமையில், பகுதி கழக நிர்வாகிகள் ஆ. மாலினி, தீ. பாலாஜி, எம்.ஏ.செந்தில் சுரேஷ், ம. உதயகுமார் ஆகியோரின் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி பார்வையாளரும், கழக வர்த்தக அணி துணை செயலாளருமான பி.டி.பாண்டிச்செல்வம் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்.

இக்கூட்டத்தில் மதுரவாயல் வடக்கு பகுதி கழகத்திற்கு உட்பட்ட வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 12/12/2025 தேதி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் வாழ்த்து அரங்கம்.

கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது என்று பகுதிச் செயலாளர் நொளம்பூர் வெ. ராஜன் தெரிவித்துள்ளார்.

### முதல்வரின் அறிவுறுத்தல்படி – சென்னையில் மழைநீரைச் சேமித்திடும் வகையில்

# புதிய குளங்கள் - புனரமைப்பு - மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள்!

## சென்னை மாநகராட்சி சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன!







சென்னை, டிச.9-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் பருவமழையினை முன்னிட்டு ஆறுகள், நீர்வழிக் கால்வாய்களில் தூர்வாரி அதன் கட்டமைப்புகளை மேம்படுத்துதல், மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகள் அமைத்தல், அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணி மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் பருவமழையின்போது மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர் தேங்குவதைத் தடுத்து, மழைநீரைச் சேமித்திடும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் விளையாட்டு மைதானங்கள் பூங்காக்கள் மற்றும் பொது இடங்களில் ஜெர்மன் தொழில்நுட்பத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

முக்கியமாக குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி அதன் கொள்ளளவை அதிகரிக்கும் பணிகளையும் மக்கள் பயன்படுத்தும் வகையில் குளத்தினைச் சுற்றி புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொளுதல், பூங்காக்களில் மழைநீர் உறிஞ்சும் பூங்காக்களுக்கான கட்டமைப்புகளை உருவாக்குதல், புதிதாக குளங்கள் அமைத்தல் உள்ளிட்ட பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், தண்டையார்பேட்டை மண்டலத்தில் உள்ள குட்செட் குளம், திருவொற்றியூர் மண்டலத்தில் உள்ள கார்கில் நகர் குளம், மணலி மண்டலத்தில் உள்ள கடப்பாக்கம் ஏரி, அடையாறு மண்டலத்தில் ரேஸ்கோர்ஸ் வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட குளங்கள், சோழிங்கநல்லூர் மண்டலத்தில் புனரமைத்து மேம்படுத்தப்பட்ட இராமன் தாங்கல் குளம் ஆகியவற்றினை மாநகராட்சி துணை ஆணையர் (பணிகள்) திரு. வி. சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.12.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பழைய குட்செட் சாலை இரயில்வே குளம்

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-46, வியாசர்பாடி, பழைய குட்செட் சாலையில் உள்ள இரயில்வே குளத்தில் மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த குளம் 2.51 ஏக்கர் பரப்பளவில் 3 மீட்டர் ஆழத்தில் 2.77 கோடி லிட்டர் நீரை சேமிக்கும் வகையில் இருந்தது.

இந்த குளத்தின் நீர் சேமிப்புத் திறனை அதிகரித்து, அருகிலுள்ள பகுதிகளைச் சுற்றிலும் மழைக்காலங்களில் நீர்த்தேக்கத்தை தவிர்க்கும் வகையிலும், குளத்தைச் சுற்றியுள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றுதல், குளத்தில் கொட்டப்பட்டிருந்த கட்டுமானக் கழிவுகள் அகற்றுதல், தூர்வாரி ஆழப்படுத்துதல் மற்றும் கரைகளைப் பலப்படுத்துதல், குளத்தில் நீர் சேரும் வகையில் அருகிலுள்ள கால்வாய்களை இணைக்கும் வகையில் கட்டுமானப் பணிகள் (Inlet Culvert) மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நீர் சேமிக்கும் திறனை கூடுதலாக 7.13 பரப்பளவு ஏக்கர் அளவில் 3மீட்டர் ஆழம் அளவில் 8.93 கோடி லிட்டர் நீரை சேமிக்க அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூடுதலாக நீரை சேமிக்கும் வகையில் மேலும், 7.13 ஏக்கர் பரப்பளவில் 3 மீட்டர் ஆழத்தில் 8.93 கோடி லிட்டர் தண்ணீரை சேமிக்கும் வகையில் மாநகராட்சியின் சார்பில் குளத்தின் கொள்ளவு அதிகரிக்கப்பட்டது. இதன் காரணமாக மொத்தம் 9.64 ஏக்கர் பரப்பளவில் 11.70 கோடி லிட்டர் 2.5 மீ. ஆழத்துடன் 1,17,090 கனமீட்டர் கொள்ளளவு உடையதாக இந்த குளம் உருவாக்கப்பட்டு இக்குளத்தை சுற்றியுள்ள குடியிருப்பு பகுதியில் உள்ள மக்கள் தங்களது குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர் தேக்கம் ஏதுமின்றி பெரிதும் பயனடைந்துள்ளனர்.

கார்கில் நகர் குளம்

திருவொற்றியூர் மண்டலத்திற்குட்பட்ட கார்கில் நகரில் பயன்பாடற்ற நிலத்தில் புதிதாக நமக்கு நாமே திட்ட நிதியில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் குளம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குளம் 9.95 ஏக்கர் பரப்பளவில் 28,432 கனமீட்டர் கொள்ளளவு நீர்த்தேக்கத் திறனுடன் உள்ளது.

இந்தக் குளத்தில் கரைகளைப் பலப்படுத்துதல், நுனிச்சுவர் மற்றும் கற்கள் பதித்தல் (Toe wall and Stone Pitching), கரைகளைப் பலப்படுத்துதல், அருகிலுள்ள பகுதிகளிலிருந்து நீர் சேரும் வகையில் கட்டுமானப் பணிகள் (Inlet), நீர் வெளியேறும் இடத்தில் மதகு வாயில் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் காரணமாக, இக்குளத்தை சுற்றியுள்ள குடியிருப்பு பகுதியில் உள்ள மக்கள் தங்களது குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர் தேக்கம் ஏதுமின்றி பெரிதும் பயனடைந்துள்ளனர்.

**கடப்பாக்கம் ஏரி**

மணலி மண்டலத்திற்குட்பட்ட கடப்பாக்கம் ஏரியில் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) மற்றும் உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி (GEF) நிதியில் ரூ.58.33 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் குளம் 134.89 ஏக்கர் பரப்பளவில் 13.4 சதுர கிலோ மீட்டர் நீர்ப்பிடிப்பு பகுதியுடன் 4 முதல் 8 மீ. ஆழத்துடன் 1.2 மில்லியன் கனமீட்டர் நீர் கொள்ளளவு திறனுடன் இருந்தது. தற்போது இது 1.9 மில்லியன் கனமீட்டர் நீர் கொள்ளளவு திறனுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் குளத்தில் ஆகாயத்தாமரை அகற்றுதல், 7.2 இலட்சம் கனமீட்டர் பரப்பளவில் வண்டல் மண் அகற்றி தூர்வாருதல், 3,450 மீட்டர் நீளத்திற்கு கரைகள் அமைத்து பலப்படுத்துதல், நீர் உள்ளே வரும் கால்வாய்கள், வெளியேறும் மதகுகள் மற்றும் உபரிவடிகால்களைப் புதுப்பித்தல், 5 ஏக்கர் பரப்பளவில் பறவை தீவு மற்றும் பல்லுயிர் வாழ்விடங்களை உருவாக்குதல். வண்டல் மண்ணைக் குறைப்பதற்கும் நீரின் தரத்தை மேம்படுத்துவதற்கும் நுழைவாயிலில் ஆழமற்ற குளம் உருவாக்குதல், பசுமைத் தோட்டங்களுடன் கூடிய பகுதிகள், பசுமைப் பரப்பளவை அதிகரிக்கும் வகையில் தாவரங்கள் நடுதல், நடைபாதை, இருக்கைகள் மற்றும் குழந்தைகள் விளையாடும் பகுதி, பட்டாம்பூச்சி மற்றும் தட்டாம்பூச்சி பன்முகத்தன்மைக்கு பிரத்யேக இடம் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த திட்டத்தில் சுற்றுச்சூழலுக்கு உகந்த கட்டுமானப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன

கிண்டி ரேஸ்கோர்ஸ் சாலையில் புதிதாக உருவாக்கப்பட்ட 4 குளங்கள்

அடையாறு மண்டலம், கிண்டி, ரேஸ்கோர்ஸ் வளாகத்தில் 14,070 கன மீட்டர் (அ) 0.50 மில்லியன் கன அடி கொள்ளளவு தண்ணீர் தேக்கம் கொண்ட ஏற்கனவே உள்ள 2 குளங்களில் அகலப்படுத்துதல் மற்றும் ஆழப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 19,560 கனமீட்டர் (அ) 0.69 மில்லியன் கன அடி கொள்ளளவு தண்ணீர் தேக்கும் திறனுடன் புனரமைக்கப்பட்டது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் புதிதாக 4 குளங்கள் 1,10,800 கன மீட்டர் (அ) 3.91 மில்லியன் கன அடி கொள்ளளவு தண்ணீர் தேக்கும் திறனுடன் கடந்த ஆண்டில் அமைக்கப்பட்டது.

மேலும், இந்த 4 குளங்களின் கொள்ளளவினை இரட்டிப்பாக அதிகரிக்கும் வகையில் இந்த ஆண்டில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 49,072 ச.மீ. பரப்பளவில், 2,45,360 கனமீட்டர் (அ) 8.66 மில்லியன் கன அடி கொள்ளளவுத் திறனுடன் 24.53 கோடி லிட்டர் மழைநீர் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இதன் காரணமாக கிண்டி, மடுவின்கரை, வேளச்சேரி, வேளச்சேரி வீட்டுவசதி வாரியக் குடியிருப்புப் பகுதி மக்கள் மற்றும் ஐந்து பர்லாங் சாலை ஆகிய பகுதிகளில் மழை வெள்ளப் பாதிப்புகள் ஏதுமின்றி இப்பகுதிகளில் உள்ள மக்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

இராமன் தாங்கலில் உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல் பூங்கா

சோழிங்கநல்லூர் மண்டலம், மாடர்ன் பள்ளி சாலை விரிவு, இராமன் தாங்கல் பகுதியில் பெருநிறுவன சமூக பங்களிப்பு நிதியில் ரூ.96.12 இலட்சம் மதிப்பில் சுற்றுச்சூழல் பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது. இந்த குளம் 41.7 ஏக்கர் பரப்பளவில் 4,72,500 கனமீட்டர் கொள்ளளவு திறனுடன் உள்ளது.

இந்தக் குளத்தில் ஆகாயத்தாமரை அகற்றுதல், பட்டாம்பூச்சி தோட்டம், பூந்தோட்டம், மூங்கில் தோட்டம், பறவைத் தீவில் பழத்தோட்டம் அமைத்தல், சிறுவர்கள் விளையாடும் பகுதி, மரங்கள் நடுதல், வெளியேற்ற வடிகாலுக்கான மதகு வாயில் அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு சென்னை மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கோட்டூர் அ. இராசசேகரன்**
**டிசம்பர் 9 (2012)**



**மாணவப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு செயல்பட்டவர். கோட்டூர் ஒன்றியச் செயலாளராக இருபது ஆண்டுகளும், திருவாரூர் மாவட்டம் உருவாகியபோது முதல் மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும் பின்னர், மாவட்டக் கழகச் செயலாளராகவும், கழக விவசாய அணி இணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**மாவட்ட ஊராட்சியின் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**“இமை கொட்டாமல் இயக்கத்தை வளர்த்த என் இளைய தம்பிகளில் ஒருவர், தங்கமாக விளங்கியவர்” என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**